# இந்தப் பழம் இனிக்கும்

( குழந்தை கதைகள் — கவிதைகள் )

பாபநாசம் குறள்பித்தன்

**ஸ்நேகா படைப்பு**

---

# இந்தப் பழம் இனிக்கும்

முதற் பதிப்பு :
குழந்தைகள் தினம்
14—11—1988

அச்சிட்டோர் :
ஜெமினி அச்சகம்,
மேல ராஜவீதி,
தஞ்சாவூர் - 613 009.

பக்கங்கள் : 80

**விலை ரூ. 8—00**

*ஸ்நேகா பப்ளிகேஷன்ஸ்,*
33, துவாரகா நகர்,
தஞ்சாவூர் - 613 001.
போன் : 22278

# பதிப்புரை

நமதின் குழந்தை பருவம் குதூகலமானது என்பதை எவராலும் மறுக்க முடியாது. நினைத்துப் பார்க்கின்றோம். அப்பாவிடம் தப்பி அம்மாவிடம் அடம்பிடித்து டீச்சரின் அதட்டலில் விழியை கசக்கி விடுவோம்.

ஆனாலும் பாட்டி, தாத்தா மடியில் படுத்துக் கொண்டு கதைகளும், கவிதைகளும் கேட்டு, இரவில் காலதாமத மாகத் தூங்க போவோம்.

பாட்டி, தாத்தா, டீச்சர் மேடம் இவர்கள் தானே நம்மை நல்ல சிந்தனையாளனாக உருவாக்கினார்கள்.

பாட்டி, தாத்தா, டீச்சர் மேடம் இவர்களுக்கு பிறகு குழந்தைகளுக்கு துணையாக இருப்பது.

எது ... ?


குழந்தைகளுக்கென வரும் கதைகளும், கவிதைகளும் தான். இதனால் நாங்கள் உங்களுக்கு கவிதைகளையும், கதைகளையும் ஒரே நூலாக தொகுத்து இந்நூலில் தருகிறோம்.


பாபநாசம் குறள்பித்தன் இந்நூலில் தன்னையே குழந்தையாக்கி **இந்த பழம் இனிக்கும்** என்கிற இந்நூலை எழுதியிருக்கிறார்.


நாங்கள் இந்நூலை அளிக்கின்றோம் — மகிழ்கின்றோம்.


— ஸ்நேகா.










# பால்

மூன்றாவது முறையாக முகுந்தனை அவன் தாய் நீலா கூப்பிட்டாள்.

“முகுந்! அப்பா வர்ற நேரமாயிடுச்சு ... போய் பால் வாங்கிட்டு வந்துடுப்பா”

“நான் போகமாட்டேன். அக்காளைப்போய் வாங்கி கிட்டு வரச் சொல்லு” என்று தெருவில் கோலி விளையாடிக் கொண்டு இருந்த முகுந்தன் சொன்னான்.

“அக்கா மாவு ஆட்டிகிட்டு இருக்காப்பா - இன்னைக்கு மட்டும் நீ போயிட்டு வாடா ...” என்று கெஞ்சினாள்.

“கொஞ்ச நேரம் விளையாட விடமாட்டிங்களே ... சரி சொம்பக் கொண்டு வாங்க”...என்று சொல்லிவிட்டு மீண்டும் ஆடத்தொடங்கினான்.

உள்ளே சென்ற முகுந்தனின் தாய் செம்போடு வந்தாள்.

“டே, ராமு நான் போயிட்டு உடனே வந்துடுறேன். நீ யாரையும் சேர்க்காம இங்கேயே இரு” என்று தன் தோழனிடம் கூறிவிட்டு மூடிபோட்ட பால் செம்பை தன் தாயிடம் வாங்கிக் கொண்டு பால் வாங்க ஓடினான்.

□

முகுந்தன் ஆறாவது படிக்கிறான். அவன் அக்காள் ப்ளஸ்டூ படிக்கிறாள். மிக அமைதியானவள். முகுந்தனோ அவளுக்கு எதிர்.

பிள்ளைகளிடம் வம்படிப்பது; எப்போதும் விளையாடுவது; இப்படித்தான் முகுந்தன் இருப்பான்.

முகுந்தனின் அப்பா வங்கி ஒன்றில் பணிபுரிகிறார். தாய் நடுத்தர பள்ளி ஒன்றில் பணிபுரிகிறார்.

□

"வாப்பா, முகுந்தன், அக்கா எங்கே போயிருக்கா?" என்று வாடிக்கையா பால் கொடுக்கும் பரிமளம் பாட்டி கேட்டாள்.

"அவ மாவு அரைக்கிறா! அதான் நா வந்தேன். இந்தாப்பாட்டி செம்பு பால் கொடுங்க ..."

"இப்படி உட்காரு ... கறந்து தர்றேன் ..."

"இனிமே தான் கறந்து தர்வீங்களா? நான் உடனே போகணுமே!"

"எப்போதும் நீங்க வந்த பின்தானே நான் கறப்பேன்..."

"எப்படியோ, உடனே கொடுங்க. நான் விளையாடப் போகணும் ..." என்று சொன்னான்.

அவன் சொல்வதையும், துடிப்பதையும் கண்ட பாட்டிக்கு சிரிப்பு வந்தது.

"சரி கண்ணு, இப்படி உட்காரு. இதோ வந்துடுறேன்!" என்று கூறிவிட்டு பாட்டி பால்கறக்கப் போனாள்.

இருப்புக் கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தான் முகுந்தன்.

ராமு நாம் போகும் வரை யாரோடும் சேர்ந்து விளையாடாமல் இருப்பானோ? இல்லை, யாரோடாவது சேர்ந்து விடுவானோ? — என்று எண்ணினான்.

நுரை பொங்க பால் கறந்து வந்த பாட்டி — "கண்ணு, இப்படி சொம்ப கொண்டா" ... என்றாள்.

சொம்பின் மூடியைத் திறந்தான்.

சுடச்சுட பாலை அளந்து சொம்பில் ஊற்றினாள்.

ஊற்றியதுதான் தாமதம் சொம்பை மூடிக்கொண்டு சிட்டாகப் பறந்தான்...

"கண்ணு பாத்துப் போப்பா..." பாட்டி சொன்னது காதில் விழுவதற்கு முன்பே அங்கிருந்து போய்விட்டான் அவன்.

ஓட்டமும் நடையுமாக கோலி விளையாட்டை நினைத்த படியே வந்து கொண்டிருந்தான்.

அடுத்தத் தெருவில் யாரோ இருந்து பட்டம் விடுவது முகுந்தனின் கண்ணில் பட்டது.

அந்தக் கலர் பட்டத்தை அண்ணாந்து பார்த்தபடியே வந்தவன் கல் தடுக்கிவிட கீழே விழுந்தான்.

பால் சொம்பு கீழே மூடி கிழண்டு விழுந்தது.

ஒரு லிட்டர் பாலில் கால் லிட்டர் விழுந்ததில் ஊற்றிப் போயிற்று.

சொம்பின் மூடி முழுதும் மண்ணாக இருந்தது. எடுத்துத் துடைத்தான். இருந்தாலும் மண் அப்பிக் கொண்டிருந்தது

அருகில் இருந்த குளத்தை நோக்கி நடந்தான். மூடியைக் கழுவிவிட்டு பால்சொம்பை மூடப்போகும்போது, இவ்வளவு பால் ஊற்றி விட்டதே; அம்மாவுக்குத் தெரிந்தால் அப்பா விடம் சொல்லி உதை வாங்கி வைப்பார்களே என்ற பயம் வந்தது.

என்ன செய்யலாம் என்று யோசித்தான்.

அடுத்த நொடியே ஆமாம் அப்படித்தான் செய்யவேண்டும். அம்மாவிற்கு எப்படித் தெரியும்? என்றவன் தன் எண்ணப்

படியே சொம்பின் மூடியால் பால் ஊற்றிய அளவு குளத்து நீரை மொண்டு ஊற்றி சொம்பை மூடினான்.

வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கியவனுக்கு கால் முட்டியில் வலி எடுத்ததும் குனிந்து பார்த்தான். விழுந்ததில் செராய்ப்பு ஏற்பட்டு லேசாக ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அதை ஒரு கையால் துடைத்துக் கொண்டுவிட்டு - விளையாட்டு ஆர்வத்தால் மீண்டும் வேகமாக நடக்கத் தொடங்கினான்.

□

பால் சொம்பை மேஜை மீது வைத்ததுதான் தாமதம், விளையாட தெருவிற்கு வந்து விட்டான்.

பாலைக் காய்ச்ச பாத்திரத்தில் ஊற்றிய முகுந்தனின் தாய்க்கு 'பக்' கென்றிருந்தது.

பாட்டி வீட்டுப் பால் ஒரு நாளும் இப்படி இருக்காதே! இது எப்படி? என்று எண்ணி குழம்பிக் கொண்டு இருக்கும் போதே அலுவலகம் விட்டு வீட்டினுள் நுழைந்தார் முகுந்தனின் தந்தை.

"மீனாட்சி கொஞ்சம் காபி கொடேன் — லேசா தலை வலிக்குது" என்று கேட்டுக் கொண்டே உடைகளைக் கலைந்தார் — மருதநாயகம்.

"இதோ பாருங்க ... " என்று பால் பாத்திரத்தோடு அவரின் அருகில் வந்து நின்றார் அவர் மனைவி மீனாட்சி.

'காபி கேட்டா நீ என்னடான்னா பாலைக் கொண்டு வந்து காண்பிக்கிறே' என்று சொல்லி சிரித்தார்.

உங்களுக்கு எப்போதும் விளையாட்டுதான்! இதோ பாருங்க பாட்டி வீட்டுப் பால் ஒரு நாளும் இப்படி தண்ணியா இருக்காது. அதுநாளே தான் மூணு வருஷமா அவுங்ககிட்டேயே வாங்குகிறோம். இன்னிக்கு என்ன-

டான்னா, தண்ணியிலே பாலக் கலந்தது போல இருக்கு...''

'' ஓ அப்படியா விசயம் ? சரி நீ காய்ச்சும் போது தண்ணி தானே ஊத்துவே. அவுங்களே இன்னைக்கு ஊத்திட் டாங்க போல இருக்கு...''

'' நீங்க வேற... கொஞ்சம் இருங்க, நான் போய் கேட்டுட்டு வந்துடுறேன்.'' என்று புறப்பட்டார்.

'' இதோ பாரு மீனாட்சி. யார் இன்னைக்குப் பால் வாங்கி வந்தா ?'' என்று கேட்டார்.

'' கவிதா மாவு ஆட்டுறாளேன்னு இன்னைக்கு முகுந்தனை அனுப்பிச்சேன் ''

'' எங்கே அவன் ? ''

'' தெருவிலே விளையாடிகிட்டு இருப்பான் ''

'' கூப்பிட்டு அவனையே போய் வரச்சொல்.. '' என்றதும், அவனை அழைக்கச் சென்றார்.

முகுந்தன் உள்ளே வரும்போதே பயந்துகொண்டே வந்தான்.

' படிக்கிற நேரத்திலே விளையாடியதுக்கு அப்பா தன்னை எதால் அடிக்கப் போகிறாரோ ?' என்று எண்ணியபடியே வந்து அறைக்குள் நுழைந்தான்.

நுழைந்தவனைப் பார்த்து அவன் தந்தை கேட்டார்.

'' நீ தான் இன்னைக்குப் பால் வாங்கப் போனாயா ? ''— கேட்டார்.

'' ஆம் '' என்பதுபோல் தலையசைத்தான்.

'' எப்போதும் வாங்குற பாட்டி வீட்டிலேதானே வாங்கினே ? ''

" அங்கேதான் வாங்கினேன் ".

" பாட்டிதான் கொடுத்தாங்களா ? "

" ஆமாம் பாட்டிதான் நான் போனதும் கறந்து வந்து கொடுத்தாங்க ! " என்றான்.

" அப்புறம் எப்படி பால் தண்ணியா இருக்கும் ? "

" எனக்கு என்ன தெரியும் ? அவுங்க அப்படித்தான் கொடுத்தாங்க "

" ஓ, அப்படியா ? " — என்றவர், அவன் காலில் அடிப் பட்டு இருப்பதைக் கண்டு — " அது என்னப்பா புண்ணு ? கீழே விழுந்துட்டியா ? "

" ஆமாம் ! "

" எப்ப விழுந்த ? "

" இப்பதான். பால் வாங்கி வரும் போது "

கீழே விழுந்தது – பால் தண்ணீராய் இருப்பது இரண்டை யும் சிறிது நேரம் ஒப்பிட்டுப் பார்த்தார்.

" இதோ பார், முகுந்தன், தவறு யாருக்கும் நடக்கலாம். ஆனால், அதுக்காக யாரும் எப்போதும் எந்த சூழ் நிலையிலேயும் உண்மையைத்தான் பேசணும். பொய் மட்டும் பேசக்கூடாது. புரியுதா ? "

எதுக்காக தன் அப்பா இப்படி பேசுகிறார் என்பது முதலில் புரியவில்லை. பின்தான் அவனுக்குப் புரிந்தது.

'சரி' என்பதுபோல் தலையாட்டினான் முகுந்தன்

"தடுக்கி கீழே விழுந்தே, சரிதான். அதுக்காக கீழே ஊற்றிய பாலுக்காக நீ தண்ணீர் ஊற்றிக் கொண்டு

வரலாமா? அப்படி எல்லாம் செய்யக்கூடாது. தவறி போனதை வந்து அம்மா கிட்டே அல்லவா சொல்லணும். அதை விட்டுட்டு, பொய் சொல்லலாமா? சரி போய் கை, கால் கழுவிட்டு படி" என்றார்.

தன்னை அடிக்கப்போகிறார் என்று பயந்து கொண்டு இருந்தவன் அவரின் பேச்சால் மனம் திருந்தி கிணற்றை நோக்கிப் போனான்.

ஒன்றுமே புரியாத நிலையில் திகைத்து நின்றாள் முருந்தனின் தாய்.

□



# ஆற்று வெள்ளம்

ஆற்றில் தண்ணீர் வந்ததே
ஆடிப் பாடி மகிழலாம்
நேற்று பார்த்த மணல்தான்
நீரில் மறைந்து போனதே !

பால்போல் நுரைகள் நீரிலே
பந்து போல வருகுதே
கால்கள் அதன்மேல் பட்டதும்
கரைந்து கரைந்து போகுதே !

நீரில் மீனைப் பிடிக்கவே
நீண்ட கொக்கு நிக்குது !
ஊரில் வளமை கூட்டவே
உழவர் ஒன்றாய் சேர்ந்தனரே !

□ □

# குழந்தை மாமா

நேரு மாமா
நல்ல மாமா !
நேர்மை தவறா
நீதி மாமா !

உண்மை சொன்ன
உயர்ந்த மாமா !
என்றும் கோட்டு
அணிந்த மாமா !

நெஞ்சில் என்றும்
நல்ல ரோஜாவை
கொஞ்சி அணிந்த
குழந்தை மாமா !

□ □

# விசிறி

பனையால் செய்த விசிறி
பாட்டி தந்த விசிறி
யானை காது போலே
அசையும் நல்ல விசிறி !

அயர்ந்த போது நமக்கு
அழகாய் உதவும் விசிறி
வியர்வை நீக்கி நம்மை
வாட்டம் போக்கும் விசிறி !

காற்று இல்லா போதும்
களிப்பில் ஆழ்த்தும் விசிறி
கோடை காலம் வந்தால்
கைகளில் தவழும் விசிறி !

□ □

# குடை

என்றும் மழைதான் வருவதால்
எனக்குக் குடைதான் வேண்டுமே!
ஒன்று இருந்தால் போதுமே
ஓடி பள்ளி செல்லுவேன் !

அப்பா எனக்கு நாளையும்
அழகு குடைதான் வாங்குவார் !
சுப்பு போல நானுமே
சுதந்திரமாக செல்லுவேன் !

பள்ளி விட்டு வந்ததும்
பாது காப்பாய் குடையையே
நல்ல இடத்தில் மாட்டுவேன்
நலமாய் நானும் போற்றுவேன் !

□ □

# கொசு

தண்ணீர் தேங்கிய குட்டையில்
தாரா ளமாய் பிறக்குது.
வெந்நீர் கண்டால் மட்டுமே
விரைந்து எங்கோ பறக்குது !

பகலில் மட்டும் சாக்கடையில்
பதுங்கி இருந்து வாழுது.
பகல்மாறி இரவு வந்தால்
பறந்து வந்து கடிக்குது !

இருக்கும் இடத்தை தூய்மையாய்
என்றும் நாமும் வைத்திடின்
வருத்தம் என்றும் இல்லையே
வாழ்வில் நமக்கு தொல்லையே !

□ □

# தவளை !

தவளை ஒன்று நீரிலே
தத்தி தத்தி வருகுது !
குவளை மலர்ந்த இடத்திலே
குதித்து ஒன்று மூழ்குது !

பச்சை கறுப்பு தவளைகள்
பகைமை யற்று வாழுது !
மிச்சம் உள்ள தவளைகளும்
மிதக்கும் இலையில் அமருது!

கரையில் கூட்டம் போடுது
கரடு முரடாய் கத்துது !
விரைவாய் வந்தப் பாம்பினால்
விரைந்து நீரில் மறையுது !

□ □

# உழவர் திருநாள்

தங்கச் சூரியன் சிரிக்குதடா
தார்வாழை யில்தேனும் வழியுதடா
எங்கும் இன்பம் பொங்குதடா – நல்
உழவர் திருநாள் வந்ததடா !

இஞ்சியும், மஞ்சளும் இணைந்ததடா
'இல்லாமை' பறவை பறந்ததடா
கொஞ்சியே கன்னல் அசையுதடா – அங்கே
கோதையர் பாட்டுப் பிறக்குதடா !

வீடுகள் கோவிலாய் ஆனதடா
வீதிகள் கோலத்தை சுமக்குதடா !
மாடுகள் மகிழ்வுடன் துள்ளுதடா – நம்
மாண்புகள் அங்கே தழைக்குதடா !

புன்னகை அரும்பி மலருதடா
புதுப்பா லிலரிசி கலக்குதடா !
இன்னல் அறுந்து வீழுதடா – நாட்டில்
இனிமை சிறந்து ஓங்குதடா !

# அறிவைத் தேடணும்!

தோட்டம் ஒன்று போடணும்
 தோழி எல்லாம் கூடணும்
ஆட்டம் போட்டு மகிழணும்
 அன்பு அங்கே மலரணும்!

பாட்டு ஒன்று பாடணும்
 பறவை போல பறக்கணும்
வாட்டும் வறுமை நீங்கணும்
 வழியை நாமும் அறியணும்!

உழைக்க நாளும் துணியணும்
 உறுதி யோடு இருக்கணும்
பழியும் வாழ்வில் நீக்கணும்
 பகுத்த றிவைத் தேடணும்!

□ □

# சின்ன மூக்குக் குருவியே!

சின்ன மூக்குக் குருவியே
சிரித்து பழக ஓடிவா!
தின்ன உனக்கு நெல்மணி
தெளிந்த நீரும் தருவேனே!

காடு மேடு எல்லாம் நீ
கடுகிப் பறந்து சென்றாலும்
வாடும் வயிறு விரும்பியே
வாட்டம் தீர்ந்து போவாயே!

நாடி வந்தால் என்னையும்
நலமாய் உன்னைக் காத்திடுவேன்!
பாடி மகிழ்ந்தே போற்றுவேன்
பறந்தே என்னிடம் வருவாயே!

□ □

ஸ்நேகா

# அது தப்புப்பா...!

அலுவலகத்தில் இருந்து வீட்டினுள் வந்து நுழைந்ததுமே சத்தம் போட்டுக் கத்தத் தொடங்கி விட்டார் கோதண்டம்.

" ஏய் சந்திரா ... "

"இதோ வந்துட்டேங்க," என்றபடியே அடுக்களையில் இருந்து ஓடி வந்தாள் அவர் மனைவி.

" இந்தப்பேனாவை யார் எடுத்தது? இங்கு இருந்தப் புத்தகத்தை எல்லாம் யார் கலைத்து வைத்தது? "

"இதுக்குத்தான் இந்த சத்தமா? என் தங்கச்சிப்பிள்ளைங்க ஊரிலே இருந்து வந்து கலைச்சிப் போட்டுட்டு இப்பதான் பஸ்ஸுக்குப் போறாங்க."

" என்ன கிண்டலா? ..."

" என்னாங்க பின்னே? இவனுங்க ரெண்டு பேரும் செய்யிற அட்டூழியம் கொஞ்சமா, நஞ்சமா? நான் எதுவும் சொல்ல முடியிலே! இவன்களை நீங்களே கேளுங்க ... " என்றபடியே அடுப்படிக்குப்போக முனைந்தவளிடம்—" இப்ப எங்கே அவனுங்க? " என்று கேட்டுக் கொண்டு இருக்கும்போதே செந்திலும், சேகரும் பட்டத்தோடும், பம்பரத்தோடும் வந்தார்கள்.

அப்பா கோபமாக இருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்ட இருவரும் தாயின் பின்புறம் மறைந்து கொண்டார்கள்.

" டே, இங்கே வாங்கடா! பேனாவை எடுத்தது யார்? புத்தகத்தைக் கலைத்தது யார்? "

செந்திலும், சேகரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"என்னடா, நான் கேட்குறேன். பதில் சொல்லாம நிக்கிறீங்க?" ...

"வந்துப்பா ... மன்னிச்சிடுங்க, இனி செய்ய மாட்டோம்" இருவருமே இழுத்தார்கள்.

"என்னடா செய்யிறதையும் செய்துபுட்டு" என்று சொல்லியபடியே ஆளுக்கு நாலு அடி போட்டார். துடித்துப் போனார்கள்.

"என்னங்க, இப்படியா பிள்ளைங்களை அடிக்கிறது? ..."

"நீ சும்மா இரு. இவன்களை இப்படியே விட்டா அவ்வளவுதான்." மீண்டும் ஆளுக்கு நாலு போட்டார். எதிர்த்து எதுவும் பேச முடியாத இருவரும் கண்ணீர் விட்டபடியே நின்றார்கள்.

"இனி இப்படி செய்வீர்களா ?"

"செய்ய மாட்டோம் ; மன்னிச்சிடுங்கப்பா" மீண்டும் இருவரும் சொன்னார்கள்.

"என்னடா இன்னும் நின்னுகிட்டு: போய் காலை கையைக் கழுவிகிட்டுப் படிக்கப்போங்க, வர்றேன்."

இருவரும் கண்ணீரைத் துடைத்தபடியே கிணற்றுக்குப் போனார்கள்.

□

"அப்பா வரட்டும், நீ அடிச்சதை எல்லாம் அப்படியே சொல்றேன்" செந்தில் அழுதபடியே சொன்னான்.
"போடா, சொல்லிக்க. நானும் சொல்றேன் ; நீ என் பேனாவை உடைச்சதை" என்றான். அவனை அடித்ததைப் பெருமையாக நினைத்தபடியே.

அவர்கள் பேசிக்கொண்டு இருக்கும் போதே அப்பா வந்து சேர்ந்து நேராக அறைக்குள் சென்று ஆடைகளைக் களைத்துவிட்டு, மாற்றுடை அணியும்போது மெல்ல அறையினுள் செந்தில் நுழைந்தான் அழுதபடியே !

" என்னப்பா செந்தில், நீ ஒழுங்காக இருந்தா ஏன் அம்மா உன்னை அடிக்கப் போறாங்க ? " என்றார், அவன் அழுவதற்குக் காரணம் அவன் அம்மாதான் அடித்து இருப்பாள் என்ற எண்ணத்தில்.

" அப்பா ! என்னை அம்மா அடிக்கல."

" பின்னே யாரு ? "

" சேகர்தான் "

" சேகரா ?..."

" ஆமாப்பா ! மேஜையில் இருந்த அவன் பேனாவை எடுத்தேன். அது கைதவறி விழுந்து நிப்பு உடைஞ்சி போச்சி. உடனே நானும் தெரியாம நடந்துடுச்சி. அண்ணே ! மன்னிச்சிடுன்னேன். நான் எவ்வளவோ சொல்லியும் கேட்காம ரொம்ப அடிச்சிட்டான்."

" மூடி இருந்த பேனா கீழே விழுந்தா நிப்பு எப்படிடா உடையும் ? "

" பேனாவை மூடி வைக்காம தானே அவன் விளையாடப் போயிட்டான்."

" அதானே பார்த்தேன். வா என்னோட ! " என்றதும் தந்தையைப் பின் தொடர்ந்தான் !

உள்ளே இருவருக்குள்ளும் என்ன நடந்து இருக்கும் என்று ஒருவாறு உணர்ந்து கொண்ட சேகர், அவர்களைப் பார்க்காதவன்போல் ' இடுக்கண் வருங்கால் நகுக " என்ற

திருக்குறளை மனப்பாடம் செய்வது போல் படித்துக் கொண்டு இருந்தான் !

"டே சேகர் ... ஏண்டா செந்திலை அடிச்சே ?..."

அவன் நடந்ததை எல்லாம் சொன்னான்,

"எல்லாம் சரிதான், எழுதி முடித்ததும் பேனாவை நீ ஏண்டா மூடி வைக்கில ... ?" என்றதும் ; அவன் தவறை மறைக்க முடியாது விழித்தான்.

"செந்தில், இங்கே வா ! உன்னை எத்தனை தடவை அடிச்சான் ... நாலு தடவை தானே ? அதே அடியை இப்ப நீ அவனுக்கு கொடு "

இதே நேரம் காபியுடன் சந்திரா அங்கே வந்தாள்.

"ஏண்டா செந்தில் சும்மா நிக்கிறே ... ம் ... அவனை அடி ... "

செந்தில் மேலும் தயங்கியபடியே நின்றான் !

மீண்டும் சொன்னார். "நீ அடி, நான் இருக்கேன் ...".

"என்னாலே முடியாதப்பா!..."

"ஏண்டா ?..."

"அண்ணன் என்னை விடப் பெரியவன் - வயதிலே மூத்தவன் ... "

"இருந்தா என்ன ? ..."

"அது தப்புப்பா... "

"எதுடா தப்பு ?... "

"அடிக்கிறதுதான் !"

குழந்தைகள் இருவருக்கும் காபியைக் கொடுத்துவிட்டு, தன் கணவர் கோதண்டத்தை அறைக்குள் அழைத்துப் போனாள்.

"ஏன் சந்திரா? கொஞ்சம் இரு... அவனுங்களுக்குள் ஒரு முடிவு எடுத்துட்டு வர்றேன்."

"இப்ப எடுக்க வேண்டியது அவனுங்களுக்கு இல்ல; நமக்குத்தான்!"

"நீ என்ன சொல்ற?"

"ஆமாங்க, எத்தனை முறை நாம இவனுங்க ரெண்டு பேரையும் அடிச்சி இருக்கோம். ஏதாவது எதிர்த்துப் பேசி இருக்காணுங்களா? அடிக்க கையை ஓங்கி இருக்காணுங்களா? வாயில்லாப் பூனையை நாம சீண்டினா கூட அது எதிர்ப்பைக் காட்டக்காலைத் தூக்குதே. ஆனா இவனுங்க... காரணம் என்னங்க?... நாம பெரியவங்கன்ற எண்ணத்தாலே தான்! இல்லாது போனா, செந்தில் அந்த வார்த்தையைச் சொல்லி இருக்க மாட்டாங்க..."

கோதண்டம் அவள் பேசியதைக் கேட்டு ஒரு நிமிடம் சிலையாகிப் போனார்!

□



# படகு

நல்ல நல்ல படகு
நாங்கள் ஏறும் படகு!
அலைகள் மீது நன்றாய்
ஆடும் நல்ல படகு!

வட்ட நீள படகு
வடிவு அழகு படகு!
கெட்டி யான படகு
கடலில் மிதக்கும் படகு!

பொங்கும் நீரின் மீதும்
பொலிவாய் செல்லும் படகு!
தங்கு தடைக ளின்றி
தொடர்ந்து செல்லும் படகு!

□ □

# சிரித்து ஆடும் சின்ன பாப்பா!

சின்னபாப்பா தொட்டிலிலே
சிரித்து ஆடுது!
சேர்த்து கையைத் தட்டித்தட்டி
ஓசை கூட்டுது!

பல்முளைக்கா வாய்திறந்து
பேசப் பாக்குது!
கால்கொலுசை ஆட்டி ஆட்டி
காதால் கேக்குது!

அம்மா பாடும் பாட்டுக்கேட்டு
அதுவும் தூங்குது!
பால்குடிக்கும் நேரம் பார்த்து
விழிச்சுப் பாக்குது!

□ □

# விளக்கு

மாலையில் மயங்கும் வேளை
மங்கையர் ஏற்றும் விளக்கு !
கோலம் போட்ட பின்னே
கோதையர் ஏற்றும் விளக்கு !

அன்னை, அக்காள், தங்கை
அன்பாய் ஏற்றும் விளக்கு !
கன்னியர் எல்லாம் கூடி
கடவுளாய்ப் போற்றும் விளக்கு!

எண்ணெயும் திரியும் இணைந்து
எழிலாய் எரியும் விளக்கு !
விண்ணில உலவும் நிலவாய்
வீட்டில் சிரிக்கும் நிலவு !

□ □

# நம்பிக்கையை வளர்ப்போம்!

ரிக்ஷாக்காரர் வருமுன்னே
    ரெடியாகணும்!
நேத்து எழுதிய பாடங்களை
    சரி பாக்கணும்!

மேரி, அலிமா, கலாவுடன்
    ஒண்ணா சேரணும்!
மணியடிக்கும் முன்னாலே
    பள்ளி போகணும்!

அம்மா செய்த பலகாரத்தை
    ஒழுங்கா திங்கணும்!
அப்பா சொல்லும் அறிவுரையை
    நன்றாய் கேட்கணும்!

கட்டுகின்ற ஆடைகளை
    வெளுத்துக் கட்டணும்!
கற்றவரும் போற்றும்படி
    நாம நடக்கணும்!

ஏற்றத் தாழ்வு பார்க்காம

ஒண்ணாப் பழகணும்!

இதயத்தையே எப்போதும்

இரக்க மாக்கணும்!

ஏற்றம் பெற சோம்பலையே

ஒழித்தே ஆகணும்!

என்றென்றும் நம்கையாலே

நாம் உழைக்கணும்!

□ □



# எனக்கு வாழ்த்து கூறுங்கள்!

சின்ன மாமா வந்தாங்க
சீத்தா பழம் தந்தாங்க !
பெரிய மாமா வந்தாங்க
பேரிச்சம் பழம் தந்தாங்க !

தாத்தா, பாட்டி வந்தாங்க
தங்க நகைப் போட்டாங்க !
சித்தப்பா வும் வந்தாங்க !
சிலுக்குச் சட்டைத் தந்தாங்க !

அப்பா, அம்மா இருவரும்
அணைத்து முத்தம் தந்தாங்க !
எனக்கு இன்று பிறந்தநாள்
எல்லோருமே வாழ்த்துங்கள் !

□ □

# கோடை

மரத்தில் இலைகள் உதிர்ந்தன
மடுவும் ஆறும் காய்ந்தன !
கரத்தில் குடையும் விரிந்தன
கால்கள் செறுப்பைத் தேடின !

எங்கும் இளநீர் விற்குது
எதிலும் சூடு தெரியுது !
நுங்கும், மோரும் சிறக்குது
நூலில் பட்டம் பறக்குது !

கதிரவன் மேற்கில் படுக்கணும்
கடமைகள் யாவும் முடிக்கணும் !
பதமாய் மாலை மலரணும்
பாங்காய் கடற்கரைப் போகணும் !

□ □

# நண்பன்

பள்ளிப் பாடம் படித்திடவே
 பாச முடனே பழகுவான் !
துள்ளி யாட மாலையிலே
 துணையாய் அவனும் சேர்ந்திடுவான் !

துயரது கண்டால் போக்கிடுவான்
 தூயது செய்ய துணையாவான் !
நயமுடன் நல்லதை சொல்லிடவே
 நாளும் நட்பாய் பழகிடுவான் !

உயிரும் கொடுக்கத் துணிந்திடுவான்
 உயர்வை சேர்க்கக் கலந்திடுவான் !
பயிராம் நட்பு வளர்ந்திடவே
 பருவ மழையாய் அவனிருப்பான் !

□ □

# ஆகா இந்தப் பழம் இனிக்கும்

பாட்டி பாட்டி கதை கேளு — இந்தப்
பேரன் சொல்லும் கதை கேளு

இரையைத் தேடி ஒரு நரியும்
இருண்ட காட்டில் திரிந்ததுவே
இரைதான் எங்கும் கிடைக்கலியே
இருந்தும் நரிதான் வருந்தலியே !

கால்கள் போன போக்கினிலே
காட்டைக் கடந்து போனதுவே !
சோலை ஒன்றை கண்ட நரி
சோர்வுடன் அதனுள் சென்றதுவே !

பசியின் களைப்பில் இருந்த நரி
படுத்த படியே மேலே பார்க்க
புசிக்கும் திராட்சை பழங்களுமே
பொலிவாய் மின்னி சிரித்தனவே !

வாட்டும் பசியைப் போக்கிடவே
வளர்கொடியை நோக்கி குதித்ததுவே
மாட்டவில்லை கைவசம் தான்
மணக்கும் திராட்சை குலைகளும் தான் ! !

எட்டாக் கனியை நரி பார்த்து
ஏக்கமாய் இருந்த வேளையிலே
பட்டு நிற (மேனி) குதிரை ஒன்று
பாங்காய் அங்கே வந்ததுவே !

இதுதான் சமயம் என்று நரி
"என்ன அண்ணே இப்பக்கம்
மெதுவாய் நடந்து வர்றீங்க ?"
மனம் திறந்து கேட்டதுவே !

ஒன்றும் இல்லை நரிதம்பி
ஓய்வு கொள்ளப் போகிறேன் !
என்று குதிரை சொன்னதுமே
ஏமாற்ற நரியும் எண்ணியது !

'அண்ணே ! விஷயம் தெரியாதா ?
இப்படியே நீங்க நின்றிடுங்க !
அந்தமரத்தின் நிழல் மீது
ஏகப் பசியுடன் சிங்கமொன்று

யாரைத் தின்னலாம் என்றெண்ணி
எதிர்பார்த்த படியே நிற்கிறது !
நேரே அதுவும் உன்னைப் பார்த்தால்
நீங்கிடும் உனது உயிர்தானே !'

என்று தந்திர நரி சொல்ல
ஏமாந்த குதிரை கேட்டபடி
என்ன தம்பி நான் செய்ய ?
இப்போது எனக்கு நீ சொல்லு !

ஆடாம அசையாம நீ நில்லு
உந்தன் மீது நான் நின்று
வாடும் சிங்கம் பசிதனக்கு
வரவு யார் தான் என பார்த்து

வகையாய் நானும் கூறும்வரை
வாயைத் திறந்து பேசாதே
வாலையும் ஆட்டி வைக்காதே
என்று நரியும் அதன்மீது

ஏறி நின்று கொண்டபடி
எட்டி திராட்சைப் பழங்களைத்தான்
பறித்துப் பறித்துத் தின்றதுவே
பசியைப் போக்கிக் கொண்டதுவே !

என்ன பாட்டி என்கதையும்
எப்படி இருக்கு நீ சொல்லு ?

சீச்சீ ! இந்தப்பழம் புளிக்கும்
என்ற பழைய கதையை மாற்றி
ஆகா ! இந்தப் பழம் இனிக்கும்
என்றாய் அறிவின் திறத்தாலே !

சின்னக் கண்ணே ! கண்மணியே
சிறப்பு உந்தன் கதைதானே !
இனிமேல் இப்படி நீ எனக்கு
தினமும் ஒரு கதை கூறுவாயே !

□ □

# உண்மை இப்போ புரியுது!

அவள் : எங்கள் வீட்டு பாப்பா
என்னைத் தூங்கச் சொல்கிறாள்
உங்கள் வீட்டு பாப்பா
என்ன செய்யச் சொல்வாள் !

அவன் : எங்கள் வீட்டு பாப்பா
அவளே நடந்து செல்வாள்
எங்கள் வீட்டு குப்பையை
அவளே பெருக்கி தள்ளுவாள் !

அவள் : எங்கள் வீட்டு பாப்பா
அவளே குளிக்க மாட்டாள்
உங்கள் வீட்டு பாப்பா
எப்படி செய்து கொள்வாள் ?

அவன் : எங்கள் வீட்டு பாப்பா
அவளே குளித்து முடிப்பாள்
எங்கள் வீட்டு பாப்பா
அவளே உடுத்தி கொள்வாள் ! !

அவள் : எங்கள் வீட்டு பாப்பா
எடுத்து உண்ண மாட்டாள் !
உங்கள் வீட்டு பாப்பா
எப்படி உண்டு முடிப்பாள் ?

அவன் : எங்கள் வீட்டுப் பாப்பா
அவளே போட்டு உண்ணுவாள் !
உண்ணும் தட்டு யாவையும்
அவளே கழுவி முடிப்பாள் !

அவள் : எங்கள் வீட்டு பாப்பாவுக்கு
இரண்டு வயது ஆகுது !
உங்கள் வீட்டு பாப்பாவுக்கு
என்ன வயது ஆகுது ?

அவன் : எங்கள் வீட்டு பாப்பாவுக்கு
ஒன்பதாகப் போகுது !
உங்கள் வீட்டு பாப்பாவின்
உண்மை இப்போ புரியுது !

□ □

# தாத்தா சொத்து....

ரமேஷ், தனியார் பள்ளி ஒன்றில் எட்டாவது படிக்கிறான். ரமேஷின் தந்தை அஞ்சல் துறையில் பணியாற்றுபவர். நேர்மையானவர். ரமேஷ் வீட்டில் இருக்கும் நேரத்தை விட விளையாட்டில் இருக்கும் நேரமே அதிகமாகும்.

காலத்திற்கு ஏற்ப கோலி, கிட்டிப்புல், பம்பரம், பட்டம் இப்படி எதையாவது ஒன்றை கைக்கொண்டு ஆடத் தொடங்கிவிடுவான்.

சென்ற மாதம் அப்படித்தான் ஒரு ஞாயிறு விடுமுறையில் மதியம் கூட சாப்பிடாமல் விளையாடிக் கொண்டிருந்தான்.

பக்கத்து ஊரில் உள்ள நண்பர் ஒருவர் வீட்டிற்குச் சென்று விட்டு மூன்று மணியளவில் வந்தார் ரமேஷின் அப்பா சங்கர்.

வீட்டில் நுழைந்ததுமே அவர் கேட்டது இது தான். ''ரமேஷ் எங்கே ?''

'' எங்கே விளையாடுறானோ தெரியிலே. நானும், அவன் பிரண்ட்ஸ் வீட்டையெல்லாம் போய் பார்த்து வந்துட்டேன். காணோம்...'' என்றாள், அவன் அம்மா.

''சாப்பிட்டாவது போனானா ?... '' என்று கேட்டார்.

''எனக்கும் அதுதானே வருத்தம். அவனைக் காணாம நானும் இன்னும் சாப்பிடாமதான் இருக்கேன் '' என்றாள்.

மாதவி சொல்லி முடித்ததும் அடுத்த நிமிடமே வீட்டின் முன் நிறுத்தி வைத்திருந்த சைக்கிளை எடுத்துக் கொண்டு சங்கர் நேரே மேலத்தெருக் கோடியில் உள்ள ஆலமரத்தை நோக்கிப் போனார்.

,இன்னைக்கு அவனை ஒருவழி பண்ணிடனும்' என்ற எண்ணத்தோடே சைக்கிளை வேகமாக மிதித்தார்.

இவனை இப்படியே விட்டால் எதிர் காலத்தில் என்ன ஆவானோ என்ற பயம் அவருள் எழுந்தது.

சைக்கிள் முன்னைவிட படுவேகமாக உருண்டது.

ஆலமரத்தை நெருங்கும் முன்பே ரமேஷ் அங்கு இருப்பது நன்றாகத் தெரிந்தது.

விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் எல்லாம் சைக்கிள் வரும் ஓசை கேட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

தன் தந்தையைப் பார்த்த ரமேஷோ ஆலமரத்தில் போய் ஒளிந்து கொண்டான்.

சைக்கிளை நிறுத்திவிட்டு, " டே, ரமேஷ் எங்கேடா ?" என்று கேட்டார்.

எல்லாரும் என்ன சொல்வது என்று ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

அதே நேரம் மரத்தின் ஓரம் நின்று பயத்தோடு ரமேஷ் எட்டிப்பார்த்தான். அவனைப் பார்த்த அவன் அப்பா " டே, ரமேஷ் இங்கே வாடா ! " என்று அதட்டலோடு கூப்பிட்டார்.

ஆல்மரத்தினின்று வெளிப்பட்ட அவனின் ஒரு கையில் பம்பரமும், மறுகையில் கயிறும் இருந்தன.

சங்கரின் விழிகள் கீழ்வானச் சிவப்பாகியது.

"சாப்பிட்டியாடா ?"

"இல்லேப்பா !..."

“அதைவிட பம்பர விளையாட்டு உங்களுக்கு முக்கியமாப் போயிடுச்சோ ? ...”

“இப்பப் போய் சாப்பிடுறேம்பா ... ” என்று ஓடத் தொடங்கியவனை—எட்டிப்பிடித்து “ம் சைக்கிளில் ஏறு” ... என்றார்.

சைக்கிள் வந்த வேகத்திலேயே வீட்டை நோக்கித் திரும்பியது.

வீட்டிற்குள் அழைத்து வந்ததும் ரமேஷிடம் எதுவும் பேசவில்லை. அவன் கையிலிருந்த பம்பரத்தையும், கயிற்றையும் வாங்கியவர் அடுத்த நிமிடமே அறுவாளை எடுத்து பம்பரத்தை ஒரே வெட்டாக வெட்டிவிட்டு, கயிற்றையும் அறுத்துப் போட்டார்.

“ராஸ்கல், உன்னை நான் விளையாட வேண்டான்னா சொல்றேன். குறிப்பிட்ட நேரம் காலையிலேயும், மாலையிலேயும் விளையாடு. மற்ற நேரத்தை வீணாக்காமல் படின்னா. நீ என்னடான்னா சாப்பிடாமக் கூடவா விளையாடுறே” — என்றபடியே அவன் அருகில் வந்து இரண்டு அறைவிட்டார். ரமேஷ் துடித்துப்போனான்.

அவன் தாய் ஓடிவந்து — “இனி அப்படி செய்யமாட்டான் அடிக்காதீங்க” என்று தடுத்தாள்.

“நீ ஒவ்வொரு நாளும் இப்படித்தான் சொல்றே. இவன் திருந்தி இருக்கானா. பெரியவங்க சொல்றாங்களேன்னு மதிப்புக் கொடுத்திருக்கானா, ராஸ்கல் — இங்கே வாடா ... இனிமேயாவது ஒழுங்கா இருப்பியா ? ...” எனக் கேட்டார்.

இருப்பேன் என்பதற்கு அடையாளமாக அழுதபடியே தலையாட்டினான்.

ரமேஷிற்கு சுத்தமாக அவன் தந்தையைப் பிடிக்காமல் போய்விட்டது.

காரணம் சுதந்திரமாக விளையாட விடாமல் இருந்ததுதான்.

அவரோடு பேசுவதையே தவிர்த்து வந்தான். அவசியம் ஏற்பட்டால் மட்டுமே பேசினான். இப்போது எல்லாமும் அவன் தாய்தான். அவரோடுதான் கடைக்குப் போவது, கோவிலுக்குப்போவது எல்லாம்.

பொங்கலுக்காக சங்கர் தன் சொந்த ஊரான திருப்பாலைத் துறைக்கு குடும்பத்தோடு சென்றிருந்தார்.

தன் ஒரே மகன் சங்கர் குடும்பத்தோடு வந்திருந்ததில் அவன் தந்தை வெங்கிடாசலத்திற்கும், தாய் தனத்திற்கும் ஏக மகிழ்ச்சி.

ரமேஷை ஒருவர் மாற்றி ஒருவர் போற்றி புகழ்ந்து கொண்டிருந்தார்கள்.

ரமேஷை அழைத்துக் கொண்டு கோவிலுக்குப் போய்வந்த அவன் தாத்தா சேரில் அமர்ந்து அன்றைய பேப்பரைப் படித்துக் கொண்டிருந்த சங்கரைப் பார்த்து "ஏண்டா, வயலுக்கு உரம் வாங்கப் போனவன் வந்துட்டானா?" என்றார்.

"இல்லப்பா!"

"உன்னைப் போய் பாத்துட்டு வரச்சொன்னேனே இன்னும் நீ போய் பார்த்துட்டு வர்லியா?"

"மறந்துட்டேப்பா! இதோ போறேன்..." என்று பயந்த படியே படித்த பேப்பரை—மேஜையில் போட்டுவிட்டு—

உடனே வெளியேப் போனார்.


தன் தந்தை வேகமாக வெளியே போவதையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த ரமேஷ் நினைத்தான்.

‘ அப்பாவுக்கு இவ்வளவு வயசாகுது. அப்படியிருந்தும், தாத்தாவைக் கண்டு இப்படி நடுங்குறாரே! ... அவர் சொன்னதைக் கேட்டதும் இப்படி ஓடுறாரே ’ என்று நினைத்ததும் — அவன் மனம் சுருங்கியது.

அப்பாவை மதிக்காமல் அவர் சொல்வதைக் கேட்காமல் நடந்து கொண்டோமே ... அது எவ்வளவு பெரிய தவறு. இனி எந்த நிலையிலேயும் அப்பா சொல்வதைக் கேட்க வேண்டும் — பெரியோர் சொல்வதைக் கேட்க வேண்டும். அப்பா வந்ததும் அவரோடு மனம் விட்டுப் பேசவேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

இப்போது ரமேஷ் எந்த நேரமும் விளையாடுவது இல்லை. படிப்பில் கவனம் செலுத்தினான்.

முன்பு வகுப்பில் எட்டாவது ‘ ரேங் ’ கில் இருந்தவன் இப்போது முதல் இடத்தில் இருந்தான்.



# துயரைத் துடைத்திடுவீர்!

காக்கைபோல் அதிகாலை எழுதல் வேண்டும்

கடல் அலைபோல் பணிதனை செய்தல்
—வேண்டும்

பூக்கள் தரும் மணம்போலே வாழ்க்கை வேண்டி

பொன்னேபோல் ஒளி வீசித் திகழவேண்டும்.

கொக்கைப்போல் வெள்ளை உள்ளம் நாமும் பெற்று

குயிலைப்போல் நாமும் பாடி திரிதல் வேண்டும்

தேக்குமர உறுதிதனைப் பெற்றுவிட்டால்

தேடிவரும் துயரந்தனைத் துறத்தலாமே!

□ □

ஸ்நேகா

# காடு

*முகிலெலலாம் வந்துதூங்கும் — எந்தன்*
*முதுகெனும் மரத்தின்மேலே !*
*அகிலெல்லாம் எந்தன்உள்ளே*
*அழகுடன் வளர்ந்து நிற்கும் !*

*காயொடு கனியும்பூவும் — நான்*
*களிப்புடன் பெற்ற செல்வம் !*
*பாயற்று தூங்குதற்கு*
*பழுத்தஇலை மெத்தைவிரிப்பேன் !*

*மானும் மயிலும் என்னுள் இணைந்து*
*மகிழ்வாய் இருக்கும் என்றும்*
*தேனைஉண்டு குதிக்கும்*
*தேகம்கருத்த கரடியும் !*

*நதியெனும் நங்கை எந்தன் — நல்ல*
*நாட்டியக்காரியாகும்*
*மதியெனும் பெண்ணாள் என்னை*
*மனமாற காதலிப்பாள் !*

ஆலம்விழுதில் ஊஞ்சல் — நன்றாய்
அமைத்தே ஆடும் குரங்கு !
வேலம்மரத்தின் தளிரை
வளைத்தே மகிழ்வாய் தின்னும் !

வாழைக்குருத்தென நீண்ட — உயர்
வாலைப் பெற்ற கிளிகள்
வாழைப்பழத்தைக் கொத்தி
வாழ்த்திப்பாடும் பறந்து !

சிட்டெலாம் ஒன்றுகூடி — நல்ல
செந்தமிழ் பாட்டிசைக்க
வட்டமாய் வந்துகுந்தி
வாழ்த்தியே புகழும்முயல்கள் !

இப்படிஎழுதாக் கவிதைகள் — என்னுள்
ஆயிரம்உண்டு தம்பி
செப்பிசெய்தி யாவும்
உண்மையா வந்துபாரேன் !

□ □

# தம்பியே !

பள்ளி செல்லும் தம்பியே
பாடம் தினமும் படிக்கணும் !
துள்ளி ஆடும் ஆட்டத்தை
துணையுடன் சேர்ந்து ஆடணும் !

நடக்கும் பாடம் எதனையும்
நாளும் வீட்டில் படிக்கணும் !
துடுக்குத் தனத்தை விட்டுவிட்டு
தூய்மை யாக இருக்கணும் !

அன்னை, தந்தை அனைவரையும்
அன்புடன் என்றும் மதிக்கணும்!
உண்மை உறுதி ஊக்கமுடன்
உழைத்து வாழ்வில் உயரணும் !

□ □

# துணையாய் இருப்பேனே !

காலையிலே எழுந்து நானும்
கணக்காய் படிப்பேனே !
மாலையிலே சோலைசென்று
மகிழ்வாய் சிரிப்பேனே !

தண்ணிஎடுக்கும் அம்மாவுக்கு
துணையாய் இருப்பேனே !
சின்னச்சின்ன கோலம்போட்டு
தினமும் பார்ப்பேனே !

அப்பா எழுதும் பேனாவிற்கு
மைப்போட்டு தருவேனே !
அண்ணன், தம்பி அனைவரிடமும்
அன்பாய் இருப்பேனே !

□ □

# சேர்த்து வைப்பேனே !

அப்பா கொடுக்கும் காசையெல்லாம்
சேர்த்து வச்சிருக்கேன்
தாத்தா கொடுத்த காசைகூட
சேர்த்து வச்சிருக்கேன் !

பள்ளிக்கூட விடுமுறையில்
பட்டம் வாங்குவேன்
பறக்கவிட அதற்கு நானும்
நூலும் வாங்குவேன் !

வாடகைக்கு சைக்கிள் ஒன்றை
எடுத்துக் கொள்வேனே !
மைதானத்தைச் சுற்றிசுற்றி
கற்றுக் கொள்வேனே !

என்னைப்போலே நீங்களும்தான்
சேர்த்து வைத்தாலே
வேண்டியதை நீங்களுமே
வாங்கி மகிழலாம் !

□ □

# சிங்கமும் முயலும்!

சிங்கத்தின் கொடுமை ஒவ்வொரு நாளும் கூடிக்கொண்டு போவதை அறிந்த காட்டு விலங்குகளும், மிருகங்களும் ஒன்று கூடி ஒரு முடிவெடுத்தன.

“இதோ பாருங்க. சிங்கராஜாவிற்கு பசி எடுக்கும்போது எல்லாம் வெறியோடு வந்து தன் தேவைக்கு மேல் வீணாக எல்லோரையும் அடித்துப் போட்டுவிட்டுப் போய் விடுகிறது. இதற்கு ஒரு வழியினை நாம் இன்றே முடிவெடுக்க வேண்டும். யாராவதுஒரு நல்ல முடிவினைக் கூறுங்கள்” என்று கூறி நிறுத்தியது மாடு.

‘நான் கூறுகிறேன்’, என்று முன் வந்தது மான்! “அதாவது ஒரே நாளில் பலர் அழிவதை நிறுத்த வேண்டுமானால், ஒவ்வொரு நாளும் அதன் இருப்பிடத்திற்கு நம் இனத்தில் ஒவ்வொருவர் போய்விடவேண்டும். அவர் பசியும் தீர்ந்து விடும். நம் இனமும் கண்டபடி அழிய வாய்ப்பு இல்லாது போய்விடும்” என்றது.

மானின் முடிவைக் கேட்ட யாவும் ‘சரி நல்ல திட்டம் தான்’ என்று ஒப்புக் கொண்டன.

“நம் திட்டத்தை சிங்கராஜாவிடம் எப்போது கூறுவது?” வெள்ளாடு கேட்டது.

“அதற்கு என்ன காலம் தாழ்த்துவது? உடனே போக வேண்டியதுதான். வாருங்கள் இப்போதே போவோம்” என்றது ஒட்டகம்.

சரி என்று சிங்கத்தின் குகையினை நோக்கி யாவும் புறப்பட்டன.

☐

யானையே சிங்கத்திடம் மீண்டும் பேசியது : " இதுதான் எங்களின் முடிவு. தங்களின் முடிவு என்ன ? " என்றது.

"இதில் என்ன இருக்கிறது ? எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால் ஒன்று ... சரியாக தினமும் உச்சிப் பொழுதிற்குள் வந்துவிட வேண்டும். கொஞ்சம் காலம் தாழ்ந்தாலும் உங்களை நான் சும்மா விடமாட்டேன். சரி தானே... ? " என்றது.

கூடி இருந்த பிராணிகள் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டன.

" என்ன மௌனம் ? " என்றது அதட்டலோடு சிங்கம்.

உடனே மாடு — " சரி அரசே ! " என்றது. அதைத் தொடர்ந்து ' அப்படியே ' என்றது மற்றவைகளும்.

கூட்டம் கலைந்தது !

□

மறுநாள் சிங்கம் காத்துக் கொண்டு இருந்தது.

அதே நேரம் — மான் ஒன்று வந்தது. "அரசருக்கரசே ! இன்று எங்கள் இனத்தில் இருந்து தங்கள் உணவிற்காக நான் வந்திருக்கிறேன். தங்கள் எண்ணம்போல் என்னை உண்டு பசியாருங்கள் " என்று மான் கூறியதும் சிங்கம் அதன் மேல் பாய்ந்து கொன்று — தின்று, பசியாறி குகையில் போய் படுத்துக் கொண்டது.

இப்படியே ஒவ்வொரு நாளும் ஆடு, மாடு, மான், ஒட்டகம் என்று அடித்துத் தின்று பசி தீர்த்துக் கொண்டு இருந்தது.

□

அன்று முயல் தன் உணவிற்காக வரவேண்டிய நாள்.

உச்சிப் பொழுதாகியும் அது வந்து சேரவில்லை.

சிங்கத்திற்கு பசி வயிற்றைப் பிசைந்தது.

முயல் சிந்தனையோடு மெல்ல நடந்து வந்து கொண்டிருந்தது. களைப்புத்தீர ஒரு கிணற்றின் மேல் அமர்ந்து சிந்தித்தது.

இன்று நாம் சிங்கத்திடம் உயிரை இழக்கக் கூடாது. நாம் இன்னும் நீண்ட நாள் வாழவேண்டும். எப்படி அதனிடமிருந்து தப்புவது? — இப்படி சிந்தித்தபடியே கிணற்றை—எட்டிப் பார்த்தது.

அதனுள்ளே அதன் உருவம் தெரிந்தது.

அதைக் கண்ட முயலின் மூளையில் சிந்தனை மேலும் படர்ந்தது.

ஓ! அப்படித்தான் செய்ய வேண்டும். என்றபடியே கிணற்றை விட்டு இறங்கி நடக்கத் தொடங்கியது.

சிங்கம், இன்று முயல் வரட்டும் ஒரே நசுக்கு நசுக்கி என்று ஆத்திரத்தோடு மண்ணைப் பிராண்டிக் கொண்டிருந்தது.

காலம் தாழ்த்தி முயல் சிங்கத்தின் முன் நின்றது.

"நான் பசியோடு இருப்பேன் என்று உனக்குத் தெரியாதா?" ஏன் இவ்வளவு நேரம்?" என்று அடிப்பது போல் அதட்டலோடு சிங்கம் கேட்டது.

அது கேட்டதற்கு ஏதும் பதில் சொல்லாது அலட்சியமாக — முயல் நின்றதை பார்த்ததும் சிங்கத்திற்கு மேலும் கோபம்

வந்தது. "நான் கேட்பதற்கு பதில் சொல்லாமல் என்ன முறைத்துப் பார்க்கிறாய்? குண்டுமணி விழியைத் தோண்டி விடுவேன் தோண்டி ஏன், தாமதம் ?" —

முயல்—அலட்சியமாக சிங்கத்தைப் பார்த்துச் சொன்னது. "என்னை நீ அடிப்பது இருக்கட்டும். தோண்டுவது இருக்கட்டும். முதலில் உன்னைவிட பெரியவன் ஒருவன் வந்து, என்னை அவன் உணவிற்கு இறையாக்கப் பார்த்தான். அவனை நீ என்ன செய்ய முடியும்? என்னைப் போல் சிறுவர்களிடம் தானே உன் வீராப்பு எல்லாம் ?" என்றது.

"என்ன ? என்னை விட இங்கே ஒருவன் பெரியவனா ? என்ன உளருகிறாய் ?".

"நான் ஒண்ணும் உளரவில்லை !"

"அப்படியா அவன் எங்கே இருக்கான்? இப்போது எனக்குக் காட்டு — பிறகு உன்னை நான் கவனிக்கிறேன் ! எங்கே — புறப்படு ..." என்றதும் முயல் மகிழ்ச்சியோடு முன்னே பாய்ந்து பாய்ந்து போனது.

அப்பாடா ! இன்று சிங்கம் தொலைந்தது. இனி நமக்கு மட்டுமல்ல, இங்கே உள்ள அனைவருக்கும் விடிவு காலம் தான் என்று எண்ணியபடியே விரைந்து முன்னே போக சிங்கம் பிடறி சிலிர்க்க கோபத்தோடு பின்னே போய்க் கொண்டிருந்தது.

வேகமாக சென்று கொண்டிருந்த முயல் நின்றது.

அதைக் கண்ட சிங்கம் கேட்டது "ஏன் நின்று விட்டாய்? எங்கே அவன் ? ..."

"அதோ, அந்தக் கிணற்றுக்குள்தான் இருக்கிறான். போய் பாருங்கள்."

"சிறு பயலே! என்னை என்னவென்று நினைத்தாய். நான் வருகிறேன் என்று தெரிந்த பின்னும் இதுவரை அவன் அங்கே இருப்பானா — என்ன? நீ போய் அவன் இருக்கிறானா என்று பார்த்து வா, பிறகு நான் வந்து சந்திக்கிறேன்! அந்தக் கிணற்றிலேயே அவனையும் உன்னையும் சமாதி ஆக்குகிறேன்!" என்று கூறி கர்ஜித்தது.

முயலுக்கு கொஞ்சம் பயம் எடுத்தது. இருந்தாலும் முயல் மிடுக்கோடு முன்னேறி சென்றது.

கிணற்றை எட்டிப் பார்த்தது. தன் உருவம் அதில் தெளிவாகத் தெரிந்தது.

மகிழ்ச்சியோடு திரும்பிய முயலைப் பார்த்துக் கேட்டது சிங்கம் "என்ன, இன்னும் இருக்கிறானா?"

"ஆமாம்! அங்கேதான் இருக்கிறான்! உங்களை ஒரு கை பார்க்கிறேன் என்கிறான்!" என்றது முயல்.

"என்ன, என்னை ஒரு கை பார்க்கிறானா? யாரவன்? வா என்னோடு" என்று பாய்ந்து சென்றது.

"என்ன? எங்கே அது?" என்று மேலும் கோபத்தோடு கேட்டது.

"அதோ இங்கேதான் கிணற்றுள்" என்றது.

சிங்கம் கிணற்றை எட்டிப்பார்ப்பதற்கும் மேலே பறந்து சென்ற காக்கை ஒன்று எச்சமிடவும் சரியாக இருந்தது.

அதன் எச்சம் கிணற்று நீரில் விழுந்ததும் தண்ணீர் கலங்கிப் போனது.

கலங்கிய நீரை எட்டிப் பார்த்த சிங்கத்திற்கு எதுவும் தெரியவில்லை.

"எங்கே காணும்? —" என்றதும் முயல் எட்டிப்பார்த்தது.

தண்ணீர் கலங்கியதால் முயலுக்கும் எதுவும் தெரியவில்லை. முயலுக்கு பயம் வந்தது.

"இங்கு தானே இருந்தது!" என்றது பயத்துடன்.

"எங்கே இருந்தது! இப்போ எங்கே போனது?"

"இங்கேதான் இருந்தது!" என்றது மீண்டும் முயல்.

சிங்கத்திற்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லை.

"என்ன இங்கேயா? அப்படியா? சரி ... நீயே தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வா. நான் இங்கேயே இருக்கிறேன்!" என்று சொல்லியபடியே முயலை ஒரு கையால் பிடித்துக் கிணற்றுக்குள் போட்டது.

கிணற்று நீரில் அடுத்த நொடியே தொப்பென்று முயல் விழுந்தது.

விழுந்த முயல் மூச்சு முட்ட திணறியபடியே தவித்து தவித்து நீந்தியது.

சிங்கத்திற்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லை.

சிறிது நேரத்தில் முயல் தத்தித் தாவி நீந்தி கிணற்றுப்படி ஒன்றில் குளிருடன் அமர்ந்தது.

மேலே அண்ணாந்து பார்த்தது. சிங்கம் நின்று கொண்டிருந்தது.

"என்ன தேடிப்பிடிச்சிட்டியாடா சிறுவா?" என்று கேலியாகக் கேட்டது.


"ஏய், நாட்டை ஆள்வதற்கு உடம்பு பெரிசா இருந்தா மட்டும் போதாதுடா. கொஞ்சம் மூளையும் வேணும்."

“சுண்டக்காய் பயலே! உன்னைவிட நான் எவ்வளவு பெரியவன். எனக்கு எவ்வளவு மூளை இருக்கும்? இங்கேயே கிட, நான் வர்றேன்!”

முயல் வெட்கித் தலை குனிந்தது!

வலியவன் வலியவன்தான், எளியவன் எளியவன்தான் என்று முயல் நினைத்துக் கொண்டது.

□



# பூவரசன்

"டே, என்னையும் சேர்த்துக்கங்கடா ..." கெஞ்சினான் பூவரசன்.

"போடா, நீ வேண்டாம். வேண்டவே வேண்டாம் ..." என்று கண்டிப்பாக மறுத்தான் மணிவாசகன்.

"டே, குமணன், நீயாவது அவன்கிட்டே சொல்லி சேர்த்துக்கச் சொல்லுடா," பூவரசன் அவனிடம் வேண்டினான்.

"டே, வாசகன் போகட்டும்டா ... இன்னைக்கு மட்டும் சேர்த்துக்கலாண்டா ! ... இவனும் நம்ம வகுப்பிலே தானேடா படிக்கிறான்."

"அதெல்லாம் வேண்டாம். அவனை சேர்க்கறதா இருந்தா நான் வர்லே" என்றான் வாசகன்.

மணிவாசகனை யாரும் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. காரணம் அவன் அந்தத் தொகுதி எம். எல். ஏ. வீட்டுப் பையன்.

தினமும் அவனோடு சேர்கிற எல்லாருக்கும் பிஸ்கெட், சாக்லெட், ஆப்பிள் என்று கொடுப்பவனாயிற்றே ! எப்படி அவனை அவர்கள் ஒதுக்க முடியும் ?

"இதோ பார் பூவரசன், நாங்க விளையாடுவதை நீ இங்கேயே உட்கார்ந்து பார்த்துக்கிட்டு இரு. அப்புறம் உன்னையும் ஒரு ஆட்டம் சேர்த்துக்கிறோம்" என்றான் சமாதானமாக முகிலன்.

பூவரசன் மேற்கொண்டு எதுவும் பேச முடியாததால் ஏக்கத்தோடு அவர்களையே பார்த்து கொண்டிருந்தான்.

"டே கறுப்பா, இன்னும் ஏண்டா இங்கே நிக்கிறே? போயேன் ஓரமா ... நாங்க விளையாடப் போறோம். உன்னைத் தொட்டாலே கறுப்பு எனக்கு ஒட்டிக் கொள்ளும் என்பதாலே தானே உன்னை நான் விளையாட்டிலேயே சேர்க்க வேண்டான்னு சொன்னேன், போடா அப்பாலே" என்று சத்தம் போட்டே சொன்னான்.

"டே, வாசகன், நீ சிகப்பா இருக்கேன்னு ஏண்டா தினமும் அவனை இப்படி கேளி பண்றே? இனியும் இதுபோலே பேசாதே!" என்ற முகிலனைத் தொடர்ந்து — எழிலன் "ஆமாண்டா மணிவாசகன் அவனும் நம்மபோலதானே, நம்ம வகுப்புதானே —"

" அப்படித்தான் பேசுவேன். நீங்க ஒண்ணும் எனக்கு சொல்ல வேணாம். விளையாட வர்றதா இருந்தா வாங்க ... இல்லே நான் போறேன்."

"வேண்டாண்டா வாசகன். இதோ இரு; ரெண்டு நிமிடத்திலே கோடு போட்டுறேன்" என்றான், அவசரமாக முகிலன்.

அடுத்த நொடியே போட்டும் முடித்தான்.

"நீங்க மூணுபேரும் என்னோட வாங்க ... எழிலன் நீங்க நாலுபேரும் அந்தப் பக்கம் போங்க ... சரிதானே!" என்றான் மணிவாசகன்.

"சரிடா யார் தொடங்குறது? ..." குமணன் கேட்டான்.

"இந்தா காசு. நீயே போடு"

" இல்ல வாசகன், நீயே போடு ... "

" அப்படியா? ... சரி. பூவா, தலையா? ... "

" தலை ... "

கையில் இருந்த ஐம்பது காசு நாணயத்தைச் சுண்டி தலைக்கு மேலே போட்டான்.

"தலை தான் ..."

"சரி நீங்களே தொடங்குங்க ..." என்றான் மணிவாசகன். அடுத்த நிமிடமே அங்கே 'சடுகுடு' விளையாட்டு கலகலப்பாகத் தொடங்கியது.

ஆனால் — பூவரசன் மட்டும் ஏக்கத்தோடு அவர்கள் விளையாடுவதையே பார்த்துக் கொண்டு அமர்ந்து இருந்தான்.

□

நாளை ஜனவரி முதல்நாள்.

மணிவாசகன் மகிழ்ச்சியோடு இருந்தான்.

அவனைச் சுற்றி அவன் வகுப்பு நண்பர்களும், தெரு நண்பர்களும் கூடி இருந்தார்கள்.

பெருமையோடு அவன் தந்தை வாங்கிக் கொடுத்திருந்த பட்டாசுகளை எல்லாம் நண்பர்களுக்கு காண்பித்துக் கொண்டிருந்தான்.

எல்லோரும் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"மணிவாசகன் இது என்ன வேடிடா!" முகிலன்தான் கேட்டான்.

"இலங்கை வெடி ... மழை பெய்யும்போது கூட — தண்ணீர்ப் பட்டாக்கூட இது வெடிக்குமாம். பயங்கர புகையோடு சீறிப் பாயுமாம். விலை எவ்வளவு தெரியுமா? ..."

"ஐந்து ரூபாய் இருக்குமா?" எழிலன் கேட்டான்.

“அடப் போடா ! ... இருபது ரூபாயாக்கும் ! ... ” பெருமையுடன் சொன்னான்.

“ இந்த ஒரு வெடியா ? ” என்றான் முகிலன் வியப்புடன்.

‘இருபது வெடி ... அட மக்கு ஒரு வெடிதான் இருபது ரூபாய் ’.

“இந்த வெடியை நாங்க நாளைக்கு வந்த பிறகுதான் நீ வெடிக்கணும் ” என்று கேட்டுக்கொண்டான் சீராளன்.

“ஆமாண்டா வாசகன், நாங்க இது வெடிச்சதே பார்த்தது இல்ல. அதுசரி, நீ நாளைக்கு எத்தனை மணிக்கு எழுந்திருப்பே ? .. ”

“காலையிலேயே ரெடி ஆகிடுவேன் நீங்களும் வந்திடுங்க. நாம எல்லாம் மாடிக்குப் போயிடுவோம்.”

“சரிடா, அப்ப நாங்க இப்ப வீட்டுக்குப் போறோம் ! ” என்றபடியே யாவரும் அவனிடம் விடைபெற்று அவரவர் வீட்டிற்குப் போனார்கள்.

□

“டே முகிலா, மணிவாசகத்துக்கு வெடி கையிலே வெடிச்சிடுச்சாமே ... நீ போய் பாத்தியா ? ... ” என்று பூவரசன் வருத்தமாய் கேட்டான்.

“பார்க்கும்படியாவாடா அவன் கையிருக்கு ?... அப்படியே கரிக்கட்டை மாதிரியல்லவா இருக்கு ... ” என்றான் முகிலன்.

“ அடப்பாவமே ! ” என்றான் உண்மையான அன்புடன்.

“ இப்ப நீ எங்கேடா போறே ? ... ” என்றான் எழிலன்.

“ மணிவாசகனைப் பார்க்கத்தான் போறேன். நீங்களும் வர்றீங்களா ? ” என்று கேட்டான் பூவரசன்.

“ நாங்க வர்லே, பட்டம் விடப் போறோம், நீயும் வர்றியா ? ... ”

"பாவண்டா! நான் அவனைப் போய் பார்த்திட்டு வர்றேன். நீங்கப் போங்க..."

"டே, உன்னைத்தான் அவனுக்குப் பிடிக்காதேடா...! விளையாடும் போது கூட என்னைக்காவது உன்னைச் சேர்த்து இருக்கானா? அப்படிப் பட்டவனைப் பார்க்கப் போறேங்கிறீயே?..." என்று கேட்டான் முகிலன்.

"என்னை அவனுக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, எனக்கு அவனைப் பிடிக்கும். நம்ம வகுப்புடா அவன்; நம்மோடு படிக்கிறான். அவனுக்குத் துன்பம்ன்னா பார்க்காம இருக்கலாமா? நீங்க பட்டம் விடப்போங்க, நான் போய் வர்றேன்" என்று கூறிவிட்டு வாசகனைப் பார்க்கப் போனான்.

மாடி அறை ஒன்றில் மணிவாசகன் அமர்ந்திருந்தான்.

கதவு லேசாக திறந்து இருந்தது.

தன் கையைப் பார்த்தபடியே இருந்தான்.

மேலே ஒன்றும், பக்கத்தில் ஒன்றுமாக மின் விசிறிகள் சுழன்று கொண்டிருந்தன.

மாடிக்கு வந்த பூவரசன் மெல்லக் கதவைத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்தான்.

கதவு திறக்கும் ஒலி கேட்டதுமே மணிவாசகன் திரும்பிப் பார்க்கத் தவறவில்லை.

"பூவரசன் நீயா?..." என்று வியப்புடன் கேட்டான்.

"ஆமாம் வாசகன்..."

"ஏன் அங்கேயே நிற்கிறே? உள்ளே வா..." என்று வாசகன் அழைத்ததும் — வந்தான் பூவரசன்.

" வாசகன், இப்போ எப்படி இருக்கே? ... "

" இதோ இப்படித்தான் இருக்கேன் ... " என்று தன் வலது கை மீது இருந்த தேங்காய் எண்ணெய் தோய்த்தத் துணியை விலக்கினான்.

கண்ணங்கறேல் என்று இருந்தக் கையைப் பார்த்ததும் பூவரசன் வேதனைப்பட்டுப் போனான்.

" எவ்வளவு அழகா, சிவப்பா இருந்த கை இப்ப இப்படி கறுப்பா ஆயிடுச்சே ! " என்று வருத்தப்பட்டவன் அவன் கையைத் தொட்டுப் பார்த்தான்.

" உன்னைத் தொட்டா கறுப்பு ஒட்டிக்குமுன்னு கேலி பண்ணினேன். இப்ப நீயே வந்து என்னைத் தொட்டுப் பார்க்கிற அளவுக்கு ஆளாகிட்டேன். என் கை இப்ப கறுப்பா இருக்கேன்னு வெட்டியாப் போட்டுட முடியும்? பிறரை எந்த நிலையிலேயும் கேலியும் கிண்டலும் செய்யக் கூடாதுன்னு இப்ப நான் நல்லாவே உணர்ந்திட்டேன், பூவரசன்.

மனசுதான் கறுப்பா இருக்கக் கூடாது. உடம்பு எப்படியும் இருக்கலாங்கிறதை இப்போ சரியாவே புரிஞ்சிகிட்டேன்."

"பூவரசன், உன்னை நான் பல நாள் கேலி பண்ணி யிருந்தும் இப்ப என்னைப் பார்க்க வந்து இருக்கியே, அதுக்கு ரொம்ப நன்றிடா !" என்று அவன் கையைப் பிடித்துக் கொண்டு கண்கலங்கினான்.

" டே, என்னடா இது எல்லாம்? நட்புக்கு ஏதுடா நிறம், மதம், சாதி எல்லாம்? " என்றான் பூவரசன்.

" உண்மைதாண்டா ! அதை நான் இப்ப நல்லாவே உணர்ந்திட்டேன் — என்று கூறிய மணிவாசகன் எதிர்ச் சுவரை நோக்கினான்.

அங்கே —

கறுப்பு — வெள்ளை —

சாம்பல் இப்படி பல நிறத்தில் பூனைக்குட்டிகள் ஒன்றாகக் கூடி விளையாடுவது போன்ற படக் காலண்டர் காற்றில் ஆடிக்கொண்டு இருந்தது !



# அப்பாவுக்கு காலுண்டு....

முருகன் பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிபவன். இளைஞன், தனியறை ஒன்றில் தங்கி இருக்கிறான்.

வேலை நேரம் போக மீதி நேரத்தில் அவனை தனித்தே பார்க்க முடியாது.

அவனைச் சுற்றி பக்கத்து வீட்டு, எதிர் வீட்டுக் குழந்தைகளே சூழ்ந்து இருக்கும்.

சனி, ஞாயிறு என்றால் சொல்லவே வேண்டாம்,போங்கள்.

அன்று ஞாயிற்றுக் கிழமை.

அவனைச் சுற்றி கூட்டம் நிரம்பி இருந்தது.

"மாமா, ஒரு கதை சொல்லுங்க" என்றான் மாமல்லன்.

"வேண்டாம் மாமா, விடுகதை சொல்லுங்க..." என்றாள் குறள்நிலா.

ஆளுக்கொன்று சொன்னார்கள்.

நிறைய பேர் கதையே என்று கேட்டதால் அதையே சொல்வதென்று முருகன் முடிவு செய்தான்.

"சரி, சொல்லட்டுமா?..." என்று கேட்டான்.

"ம்..." என்று எல்லாரும் சொன்னதும் — முருகன் சொல்லத் தொடங்கினான். 'அவளுக்கு' மோகனான்னு பெயர்.

வயது மூணு; படு சுட்டி, எல். கே. ஜி. படிக்கிறாள்.

அவுங்க அப்பா ரயில்வே வேலையிலே இருக்காரு நல்லவரு. அவுங்க அம்மாவும் நல்லவங்க.

"பள்ளி கூடத்திலே சேர்றதுக்கு முன்னே எல்லாம், பக்கத்து வீட்டுக் குழந்தைங்க பள்ளிக்கூடம் போகும் போது இவளும் ஒரு பையை எடுத்து கிட்டு, அதுலே ஏதாவது ஒரு வாரப்பத்திரிகையை போட்டுகிட்டு கிளம்பிடுவா. அவுங்க அம்மா அனுப்பலேன்னா அழுவா. அப்படி ஒரு ஆர்வம் படிப்பிலே அவளுக்கு.

இப்ப சொல்லவே வேண்டாம். ஏழு மணிக்கே பள்ளிக்குக் கிளம்பிடுவா. சிலேட்டை எடுத்து நாலுமுறை தண்ணீர் விட்டு கழுவுவா. ஏ. பி. சி. டின்னு எழுதுவா... அ, ஆவன்னா எழுதுவா... பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுக்கும் பாட்டை எல்லாம் பாடி ஆடுவா...

அப்படித்தான் ஒரு நாள் மாலையிலே குட்டிச் சேரிலே உட்கார்ந்து எழுதிகிட்டு இருந்தா. எழுதுனத அவுங்க அம்மாகிட்டே கொண்டு போய் காட்டினா. மோகனா, எழுதியிருந்தது தப்பா இருந்ததனாலே... 'தப்பா எழுதி இருக்கே. போய் நல்லா எழுதிகிட்டு வா'ன்னு சொன்னதுக்கு- "போ... உனக்குத் தெரியாது... அப்பா தான் அறிவாளி. நான் அப்பாகிட்டே கேட்டுக்குறேன்" என்று சொல்லி விட்டு — அவுங்க அப்பா கிட்டே போனாள்.

"அப்பா ...நான் எழுதி இருக்கேன் ... அம்மா தப்புன்னு சொல்றாங்க"ன்னு சொன்னா.

பேப்பர் பாத்துகிட்டு இருந்த அவுங்க அப்பா உடனே மோகனா எழுதியிருந்ததை வாங்கிப் பார்த்தார்.

அவ என்ன எழுதியிருந்தா தெரியுமா? ...அப்ப, அம்ம, அக்க -ன்னு எழுதியிருந்தா.

அவள் எழுதியிருந்தது தப்புன்னு அவருக்குத் தெரியும். இருந்தும் சொன்னார்.

மோகனா நீ அழகா எழுதி இருக்கியே ... இதையா அம்மா நல்லா இல்லேன்னு சொன்னாங்க? என்று அவளுக்கு ஆதரவாய் கேட்டார்.

'ஆமாப்பா! அம்மா மக்கு' ... என்று சிரித்துக் கொண்டே சொன்னா.

இவள் எழுதியிருக்கும் தப்பை எப்படி சுட்டிக் காட்டுறதுன்னு கொஞ்சநேரம் யோசனைப் பண்ணினார்.

அப்படித்தான் செய்யணுமுன்னு முடிவு பண்ணி மோகனாகிட்டே மெல்ல பேச்சை ஆரம்பிச்சார்.

இதோ பார் மோகனா ... நீ எழுதியிருக்கே ... நான் ஒண்ணு கேப்பேன். நீ பதில் சொல்லணும். சரிதானேன்னார்.

அதுக்கு அவளும் சரின்னாள்.

அப்பாவுக்கு காலு இருக்கான்னு கேட்டார். அதுக்கு அவ, ஆமாம் இருக்குன்னா.

அப்புறம் அம்மாவுக்கும், அக்காவுக்கும் காலு இருக்கான்னு கேட்டார்.

உடனே அவளும் இருக்குன்னா.

இங்கே அப்பான்னு எழுதறதுக்கு பதிலா நீ 'அப்ப'ன்னு எழுதியிருக்க. அப்பாவுக்குத்தான் காலு இருக்கே. அதனாலே இங்கே ஒரு காலை இப்படி 'ா' என்று போட்டுக் காட்டினார். அம்மாவுக்கு காலு இருக்குல்ல. அதனால 'அம்ம'ன்னு எழுதியிருக்கப் பாரு. இங்கே இப்படி 'ா' ஒரு காலப் போடணும் — என்று அவர் சொல்லிக் கொண்டு வரும்போதே — மோகனா சொன்னா. அக்காவுக்கும் காலு இருக்கு என்றாள்.

ஆமாம், அதனாலே 'அக்க'ன்னு எழுதியிருக்க பாரு. இங்கே ஒரு காலு போடணும். சரிதானா! என்று போட்டுவிட்டுக் கேட்டாரு.

அதுக்கு அவ உடனே, ம்... எனக்கு தெரிஞ்சிடுச்சி... சிலேட்டைக் கொண்டாப்பா, நான் போயி எழுதிட்டு வர்றேன் என்று வாங்கிக் கொண்டு திண்ணைக்கு ஓடினாள்.

மெல்ல சிரித்துக்கொண்டே அவ அப்பா மீண்டும் பேப்பரை பார்க்க ஆரம்பிச்சுட்டார்.

மோகனா திண்ணையிலே உட்கார்ந்து அம்மா, அப்பா, தவளை, ஓணான், கீரி என்று எழுத ஆரம்பிச்சு, சிலேட்டு நிறைய, புத்தகத்திலே இருந்ததை எல்லாம் எழுதி எடுத்துகிட்டு வந்து அவுங்க அப்பா கிட்டே கொண்டு வந்து காட்டினா ... அதப்பாத்ததும் அவருக்கு ஒருபுறம் சிரிப்பு, மறுபுறம் வியப்பு !...

என்னப்பா, நல்லா எழுதி இருக்கேனா?ன்னு கேட்டா.

அவருக்கு என்ன சொல்றதுன்னு ஒண்ணுமே புரியிலே ... இருந்தாலும் சொன்னாரு ! மோகனா அம்மா, அப்பா, அக்கா எல்லாம் நல்லா எழுதி இருக்கே...

தவளைக்கும், ஆட்டுக்கும், கீரிக்கும் ஏம்மா இப்படி 'ா' கால் போட்டு இருக்கேன்னு கேட்டாரு.

அதுக்கு அவ என்ன சொன்னா தெரியுமா?

அப்பா, அப்பா ... ஆட்டுக்கு காலு இருக்கு, கீரிக்கும் கால் இருக்கு அதான் போட்டேன். நீங்கதானே காலு இருந்தா காலு போடச் சொன்னீங்க" என்றாளே பார்க்கலாம் — அவருக்கு வந்த சிரிப்பை அடக்கவே முடியவில்லை — என்று முருகன் கூறி கதையை நிறுத்தியதும் அவனைச் சுற்றி இருந்த அத்தனைக் குழந்தைகளும் சிரிப்பை அடக்க முடியாமல் வாய் விட்டே சிரித்தார்கள்.

□ □

# தாடி மாமா!

தாடிமாமா வர்றாரு
தமிழைச்சொல்லி தர்றாரு
ஆடி ஓடி விளையாடும் – நம்
அழகைக்கண்டு ரசிப்பாரு !

சின்னச் சின்ன கதைகளும்
சிரிக்க சிரிக்க சொல்வாரு
பொம்மை செய்யும் கலையையும் – நமக்கு
புதிது, புதிதாய் சொல்வாரு !

அறிவியல் கலையை நமக்கெல்லாம்
அன்புடன் சொல்லித் தருவாரு !
அறிவைப் பெருக்க தோழர்களே – நீங்கள்
ஒன்றாய் இணைந்து வாருங்களேன் !

□ □

# கண்ணே பாப்பா அழாதே!

*அம்மா போட்ட பூந்தொட்டில் — நீ*
*அசைந்து ஆடும் கயிர்கட்டில்!*
*சும்மா சும்மா அழாமல் — நீ*
*சுகமாய் தூங்கும் மணிக்கட்டில்!*

*கண்ணே பாப்பா அழாதே — அம்மா*
*கடைக்குப் போறா அழாதே!*
*தின்ன உனக்கு பழம்வருமே! — நல்ல*
*தித்திப்பு மிட்டாயும் உடன்வருமே!*

*அம்மா வேலை செய்யணுமே — துடைத்து*
*அடுப்பை பற்ற வைக்கணுமே!*
*பஞ்சாய் இட்லி அவிக்கணுமே — நான்*
*பள்ளி சென்று படிக்கணுமே!*

*அழுது கொண்டே நீயிருந்தால் — வீட்டில்*
*எப்படி வேலை நடக்குமம்மா?*
*அம்மா வருவா தூங்கம்மா — நீ*
*அழாமல் இருந்தால் நலமம்மா!*

□ □

# தூய்மையாக வாழணும்!

துள்ளித் துள்ளி ஓடடா
தூயத் தமிழில் பாடடா !
வள்ளுவன் குறளை படியடா - உனக்கு
வாழ்வில் நிகர் யாரடா !

நீரில் தினமும் ஆடணும்
நல்லவரோடு பழகணும்
மாரியைப் போலே நீயுமே - தினம்
மயங்காது கடமை செய்யணும் !

தூய்மை யாக இருக்கணும்
துன்பத்தை நீயும் தகர்க்கணும்
வாய்மை யோடு வாழணும் - தம்பி
வாழ்வில் புகழைச் சேர்க்கணும் !

□ □

# இளநீர்!

குண்டு குண்டு இளநீர்
குளிர்ந்த நீரைத் தந்திடும்
மூன்று கண்ணு இளநீர்
முப்பது காசு இளநீர்

தாகம் போக்கும் இளநீர்
தண்ணீர் நிறைந்த இளநீர்
வேக மாக கோடையில்
விற்கும் நல்ல இளநீர்

பச்சை சிகப்பு இளநீர்
பாங்காய் இருக்கும் இளநீர்
இச்சை கொடுக்கும் இளநீர்
எவரும் விரும்பும் இளநீர்

☐ ☐

# காந்தி

அண்ணல் காந்தி என்பவர்
அன்பை நாளும் பொழிந்தவர்
இன்னல் வந்த போதிலும்
எதிர்த்து பிறரை வென்றவர் !

ஏசு புத்தன் போலவே
இந்த நாட்டில் வாழ்ந்தவர்
மாசு நீக்கி மனதிலே
மாண்புகள் பலவே பெற்றவர் !

வாய்மையை உணவாய் உண்டவர்
வள்ளுவன் குறளில் நின்றவர்
தூய்மை யாக இருந்தவர்
தொண்டில் காந்தி உயர்ந்தவர் !

□ □

# மண்வெட்டி

கொல்லை மண்ணை வெட்டியே
கோட்டை போல கட்டலாம்
கள்ளிச் செடியை களைந்துமே
கரும்புத் தோட்டம் போடலாம்!

மேடு பள்ளம் நீக்கியே
மெத்தை போல ஆக்கலாம்
வீடு கட்ட மண்ணையும்
விரைந்து சேர்த்து வைக்கலாம்!

முல்லை ரோஜா செடிகளுக்கு
முனைந்து களையும் வெட்டலாம்
நல்ல கிணறு வெட்டியே
நாமும் அதிலே குளிக்கலாம்!

□ □

# கூடி வாழுங்கடி

பள்ளி சிறுமியர் எல்லாரும் - இங்கே
பாடி மகிழ்ந்திட வாருங்கடி !
துள்ளித் திரிகின்ற வேளையிலே - நம்
தேசக் கொடியினை ஏற்றுங்கடி !

எல்லாரும் ஒன்றாய் நில்லுங்கடி - நம்மில்
ஏதடி வேற்றுமை சொல்லுங்கடி !
வெல்லும் தமிழைப் பாடுங்கடி - நம்
வெற்றிக் கொடியினை ஏற்றுங்கடி !

வல்லவர் வருந்திப் பெற்றதடி – நம்
வாழ்வில் சுதந்திரம் தந்ததடி !
பல்லோர் உழைப்பிலே பெற்றதடி – இன்று
பட்டொளி வீசிப் பறக்குதடி !

பெற்றதைப் பேணிக் காப்போமடி - கதை
பேசித் திரிவதை மாற்றுங்கடி !
கற்றவர் கூட்டத்தைக் கூட்டுங்கடி - தினம்
களிப்பிலே கூடி வாழுங்கடி !

□ □

# தூரிகை

குருவிப் படங்கள் தீட்டலாம்
கொக்குப் படமும் தீட்டலாம்
அருவிப் படமும் தீட்டலாம்
அழகு மலையும் தீட்டலாம்!

மயிலின் படங்கள் தீட்டலாம்
மான்கள் படமும் தீட்டலாம்
குயிலின் படமும் தீட்டலாம்
குதிரைப் படமும் தீட்டலாம்!

வண்ண வண்ண நிறங்களை
விரும்பித் தொட்டு தூரிகையால்
எண்ணி றைந்தப் படங்கள்
எழிலாய்த் தீட்டி மகிழலாம்!

□ □

# கம்பளி

ஆட்டு ரோமத் தாலே
அழகாய் நெய்த கம்பளி!
வாட்டும் குளிரைப் போக்கிட
வாங்கி வந்த கம்பளி!

மரங்கள் போட்டக் கம்பளி!
மான்கள் போட்டக் கம்பளி!
உறுதியான நல்ல கம்பளி
உழைக்கும் நன்றாய் கம்பளி!

வண்ண வண்ண நிறத்திலே
வகைவகையான கம்பளி!
இன்னும் இருக்கு கடையிலே
இன்றே சென்றால் வாங்கலாம்!

□ □

# அறமே சிறந்த பண்பாகும்

கூட்டல், கழித்தல் படிக்கணும்
    கூடியிருக்கப் பழகணும்
நாட்டம் கல்வியில் இருக்கணும்
    நாளும் நன்றாய் உழைக்கணும்!

தாயையும், தந்தையும் மதிக்கணும்!
    தாய்திரு நாட்டையே நினைக்கணும்!
மாயை சாதியை மறக்கணும்
    மாண்புடன் சிறந்து ஓங்கணும்!

குறள்தான் உலகில் உயர்ந்தநூல்
    குறிப்பாய் உணர்ந்து பயிலணும்!
அறமே சிறந்த பண்பாகும்
    அறிந்து அதன்வழி நடக்கணும்!